கல்விப்பொதுத்தராதரப்பத்திரம் (உயர்தரம்)

தரம் - 12,13

# தமிழ்

## பாடத்திட்டம்

**(2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

**தமிழ்மொழித்துறை**
**மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானபீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**இலங்கை**

## 1.0 அறிமுகம்

வலிமை மிக்க தொடர்பாடலூடகமாகிய மொழி, மனிதனின் உன்னத படைப்புகளுள் ஒன்றாகும். எந்தவொரு சமூகமும் அதன் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக அந்தச் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாகப் பிரயோகிக்கும் சொல்லாடலே மொழி எனக் கூறலாம். மனிதனின் சிந்தனை விருத்திக்கும் அறிகைப்புல விரிகைக்கும் மொழி இன்றியமையாததாகும். அத்துடன் ஒரு சமூகத்தின் தனித்துவத்தைக் குறித்து நிற்பதும் மொழியாகும்.

மொழியைப் பயன்படுத்தி இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. மொழியும் இலக்கியமும் வேறுபிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. மொழி என்பது மனித வாழ்வுடன் தொடர்புடைய ஓர் உயரிய கலையாக்கமாகும். இலக்கியம் மனிதனது மனதில் இரசனையுணர்வைத் தூண்டி, புத்துணர்வூட்டும் தன்மையுடையது. எனவே, உணர்திறன் மிக்க உள்ளத்தையும் ஆக்கபூர்வமான சிந்தனையையும் கொண்டோரை உருவாக்குவதே மொழியும் இலக்கியமும் இணைந்த இப்பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும்.

புதிய கல்வி மறுசீரமைப்புக்கு அமைய பாடசாலைத் தொகுதியில் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. அதன்படி கல்விப் பொதுத்தராதர உயர்தர தமிழ்ப்பாடத்துக்காக, ஏழு பிரதான தேர்ச்சிகளின் கீழ் மொழி, இலக்கியப் பாட உள்ளடக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்தேர்ச்சிகளை அடையத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கு செய்தல் இன்றியமையாததாகும்.

புதிய கல்வி எண்ணக்கருக்களுக்கேற்ப மாணவரை வழிப்படுத்துவதே புதிய கலைத்திட்டத்தின் நோக்கமாகும். கற்றல்-கற்பித்தல் செயன்முறையைப் புதுமைப்படுத்தி மாணவரது அடைவு, மதிப்பீட்டுப் பண்பாட்டிலிருந்து கணிப்பீட்டுப் பண்பாட்டிற்குச் செல்வதற்கும் மற்றும் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கல்வியை வழங்குவதற்கும் தேவையான விடயங்கள் இப்பாடத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

செயற்றிட்ட மதிப்பீடு, கணிப்பீடு போன்ற எண்ணக்கருக்களைப் புதிதாக அறிமுகஞ் செய்து அவற்றின் ஊடாக, க.பொ.த உயர்தர மாணவரை ஒரு சீரான குறிப்புகளை மனனம் செய்யும் நிலையில் இருந்து விடுவித்து, அறிவைத்தேடிச் செல்பவராக மாற்றுவதற்கான தூண்டல் இப்பாடத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழினுட்பம், (Information Technology) பரந்து விரிந்த தொடர்பாடல் வலையமைப்பு போன்ற பல்வேறு நவீன தொழினுட்பச் சாதனங்களை முறையற்றவகையில் பயன்படுத்துவதோடு அவற்றினது பாதகமான விளைவுகளுக்குப் பெரும்பாலான மாணவர்கள் ஆட்பட்டுள்ளனர். அவர்களைச் சரியான மொழிப்பயன்பாட்டின்பால் வழிப்படுத்துவதும் தொல்பெரும் இலக்கியப் படைப்புகள், தரமான ஆக்கங்கள், தற்கால உரைநடை மற்றும் கவிதைப் படைப்புகளை வாசித்து நயந்து, அவை தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்கச் செய்வதும் ஆசிரியர் உட்பட மூத்தோர் அனைவரதும் பொறுப்பாகும்.

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையின்போதும் பாட இணைச் செயற்பாடுகளின்போதும் இலக்கிய நயத்தலுக்கும் எண்ணக்கரு விருத்திக்கும் பொருத்தமானவாறு நூல்களை வாசிக்கும் வகையில் மாணவரை வழிப்படுத்துவதும் அறிவைத் தேடிப்பெறுவதற்கேற்றவாறு மாணவர்மையக் கல்விச் செயன்முறையைத் திட்டமிடுவதும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளைப் புதுமைப்படுத்திக் கொள்வதற்கும், மாணவர் மையக் கற்றல் செயன்முறையை விருத்தி செய்து கொள்வதற்கும் இப்பாடத்திட்டம் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக அமையும்.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- மொழிவழியாகத் தெளிவாகச் சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தொடர்பாடலுக்கும் வேண்டிய தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- இலக்கியத்தை விளங்கிக் கொள்ளவும் இரசிக்கவும் விமர்சனஞ் செய்யவும் வேண்டிய தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளல்.
- பல்வேறு இலக்கிய வடிவங்களின் அமைப்பை அறிந்து அவற்றுடன் தொடர்புடைய ஆக்கங்களைப் படைக்கும் திறனை வளர்த்துக் கொள்ளல்.
- தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்கினையும் அதன் பண்புகளையும் விளங்கிக்கொள்ளல்.
- அடிப்படை இலக்கண அறிவை விருத்தி செய்துகொள்ளல்.
- இலக்கிய வழிவரும் மானுட பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு வளர்த்துக்கொள்ளல்.

## 12 ஆம் 13 ஆம் தரங்களுக்குரிய ஒவ்வொரு தவணைக்குமான தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்

| தரம் | தவணை | தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும் | பாடவேளை |
|---|---|---|---|
| 12 ஆம் தரம் | முதலாம் தவணை | 1.0 - 1.1, 1.2, 1.3, 1.4, 1.5<br>2.0 - 2.1, 2.2, 2.3<br>3.0 - 3.1, 3.2, 3.3<br>4.0 - 4.2<br>5.0 - 5.1, 5.2<br>7.0 - 7.2, 7.3 | 85 |
| | இரண்டாம் தவணை | 1.0 - 1.1, 1.2, 1.3, 1.4<br>2.0 - 2.1, 2.2, 2.3<br>3.0 - 3.1, 3.2, 3.3<br>5.0 - 5.1, 5.2<br>6.0 - 6.1, 6.2<br>7.0 - 7.1, 7.2, 7.3, 7.4 | 95 |
| | மூன்றாம் தவணை | 1.0 - 1.4<br>2.0 - 2.1, 2.2, 2.3<br>3.0 - 3.1, 3.2, 3.3<br>4.0 - 4.2<br>5.0 - 5.1, 5.2<br>6.0 - 6.1, 6.2<br>7.0 - 7.4 | 95 |
| 13 ஆம் தரம் | முதலாம் தவணை | 1.0 - 1.3, 1.4, 1.5<br>2.0 - 2.1, 2.2, 2.3<br>3.0 - 3.1, 3.2, 3.3<br>4.0 - 4.1, 4.2<br>5.0 - 5.1, 5.2<br>6.0 - 6.1, 6.2<br>7.0 - 7.3 | 85 |
| | இரண்டாம் தவணை | 1.0 - 1.1, 1.2, 1.3, 1.4, 1.5<br>2.0 - 2.1, 2.2, 2.3<br>3.0 - 3.1, 3.2, 3.3<br>4.0 - 4.1, 4.2<br>5.0 - 5.1, 5.2<br>6.0 - 6.1, 6.2<br>7.0 - 7.5 | 95 |
| | மூன்றாம் தவணை | 1.0 - 1.1, 1.2, 1.3, 1.4, 1.5<br>2.0 - 2.1, 2.2, 2.3<br>3.0 - 3.1, 3.2, 3.3<br>4.0 - 4.1, 4.2 | 30 |

## 3.0 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- |
| 1.0 தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத் திறன் உள்ளவராகச் செயற்படுவார். | 1.1 செயல்திறனும் விளைதிறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | - தகவல்களையும் அபிப்பிராயங்களையும் இனங் கண்டு கூறுதல்.<br>- கேட்டுக் கிரகித்து தகவல்களையும் தரவுகளையும் சேகரித்து அவற்றை ஒழுங்குபடுத்திக் கூறுதல்.<br>- விடயங்களைக் கேட்டு ஒருமித்த ஒரு முடிவுக்கு வருதல்.<br>- ஒப்பு நோக்குதல்.<br>- தொகுத்துக் கூறுதல், சுருக்கிக் கூறுதல்.<br>- சுய அபிப்பிராயங்களைத் தெரிவித்தல். | 10 |
| | 1.2 சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார். | - தமது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் உணர்வுகளையும் பண்புடன் வெளிப்படுத்தல்.<br>- குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான விவரங்களை அலசுதல்.<br>- தமது கருத்தை வலியுறுத்திக் கூறுதல்.<br>- பயனுறுதியுள்ள வகையில் கருத்துக்களைப் பரிமாறல்.<br>- கருத்துக்களைத் தமது சொந்த அனுபவத்துடன் தொடர்புபடுத்தி கேட்போர் ஏற்றுக்கொள்ளும் வகையில் விவரித்தல்.<br>- உசாவி அறிந்தவற்றை வெளிப்படுத்தல். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 1.3 எண்ணங்களையும் அபிப்பிராயங் களையும் புலப்படுத்திப் பண்போடு பேசுவார். | - தலைப்பொன்றினைத் தெரிவுசெய்தல்.<br>- தலைப்புக்கேற்பப் பேசுதல்.<br>- கருத்தை முன்வைப்பதற்குப் பொருத்தமான சட்டகத்தை அமைத்தல்.<br>- இலக்கினை அமைத்துப் பேசுதல்.<br>- குறுகிய நேர அவகாசத்தில் ஆயத்தப்படுத்திப் பேசுதல்.<br>- பொருத்தமான தொடர்கள், பழமொழிகள், மேற்கோள்கள் முதலியவற்றைக் கையாண்டு பேசுதல்.<br>- கேட்போரை ஈர்க்கும் வகையிலும் உடன்படுத்தும் வகையிலும் பேசுதல்.<br>- நேர வரையறைகளைக் (இடம், காலம், சூழல்) கருத்திற்கொண்டு பேசுதல். | 15 |
| | 1.4 குறித்த விடயம் தொடர்பாக வெவ் வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சி களிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார். | - மேடைப்பேச்சு<br>- கவியரங்கம்<br>- விவாதம்<br>- சுழலும் சொற்போர், பட்டிமன்றம், வழக்காடு மன்றம். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 1.5 பல்வேறு சந்தர்ப்பங்கள் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுவார். | - வானொலி, தொலைக்காட்சி செய்தி வாசித்தல்.<br>- நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல்.<br>- நேர்முக வர்ணனை செய்தல்.<br>- நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல்.<br>- அறிக்கைப்படுத்தல், அறிக்கை எழுதுதல். | 15 |
| 2.0 செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துகளையும் செம்மையான மொழி நடையில் முன்வைப்பார். | 2.1 உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். | - செய்யுள் இலக்கியங்களை ஈடுபாட்டுடன் வாசித்த்ல்.<br>- கருத்தைக் கண்டுகொள்வதற்கான உபாயங்களைப் பயன்படுத்தி வாசித்தல்<br>- முன்னைய அறிவு, அனுபவம், விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வாசித்து,கருத்துக்களை உள்வாங்குதல்.<br>- ஒரு விடயத்தைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்களை உள்வாங்கி தெளிவான நிலைப்பாட்டிற்கு வருதல்.<br>- வாசித்துப் பெற்ற அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்துகொள்ளல். | 25 |
| | 2.2 குறித்த இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார். | - கால வரையறை<br>- அரசியல், சமூக, சமய, கலாசார, பொருளாதார நிலைமைகள் | 15 |
| | 2.3 பாடத்தை (Text) அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். | - மையக்கருத்து, துணைக் கருத்துக்களை இனங்கண்டு எழுதுதல்.<br>- செய்யுளைச் சந்திபிரித்தும் கொண்டு கூட்டியும் எழுதுதல். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 3.0 உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துகளையும் செம்மையான மொழி நடையில் முன்வைப்பார். | 3.1 உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். | - அரும்பதங்களை இனங்கண்டு அவற்றின் பொருளை எழுதுதல்.<br>- செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுதல்.<br>- கிரகித்து எழுதுதல்.<br>- குறிப்பெடுத்தல்.<br>- சுருக்கி எழுதுதல்.<br>- விரித்து எழுதுதல்.<br>- தொகுத்து எழுதுதல்.<br>- நயந்து எழுதுதல்.<br>- விமர்சித்து எழுதுதல்.<br><br>- உரைநடை இலக்கியங்களை ஈடுபாட்டுடன் வாசித்தல்.<br>- விடயங்களைக் கிரகித்துக் கொள்வதற்கான உபாயங்களைப் பயன்படுத்தி வாசித்தல்.<br>- முன்னைய அறிவு, அனுபவம், விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வாசித்து கருத்துக்களை உள்வாங்குதல்.<br>- ஒரு விடயத்தைப் பற்றிப் பல்வேறுபட்ட கருத்துக்களை உள்வாங்கித் தெளிவான நிலைப்பாட்டிற்கு வருதல்.<br>- வாசித்துப் பெற்ற அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளுதல். | 20 |
| | 3.2 இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார். | - கால வரையறை<br>- அரசியல், சமூக, சமய, கலாசார, பொருளாதார நிலைமைகள் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 3.3 பாடத்தை (Text) அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன் வைப்பார். | - மையக் கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு எழுதுதல்.<br>- கிரகித்து எழுதுதல்.<br>- குறிப்பெடுத்தல்.<br>- சுருக்கி எழுதுதல்.<br>- தொகுத்து எழுதுதல்.<br>- நயந்து எழுதுதல்.<br>- விமர்சித்து எழுதுதல். | 20 |
| 4.0 இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். | 4.1 பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம் பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்து கருத்துக்களை முன்வைப்பார். | • சொல், சொற்றொடர், வாக்கியம்<br>- அருஞ்சொற்கள், மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்கள், கலைச்சொற்கள், இணைமொழிகள், அடுக்கிடுக்குத் தொடர்கள். (கட்டுரை, சிறுகதை, செய்யுள், கவிதை, நாடகம், கடிதம், அறிக்கை.....) | 20 |
| | 4.2 ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார். | - கவிதை<br>- கட்டுரை<br>- சிறுகதை<br>- நாடகம் | 15 |
| 5.0 தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். | 5.1 காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன் வைப்பார். | - காலவரையறை<br>- அரசியல், சமூக, சமய, கலாசார, பொருளாதார நிலைமை.<br>- (சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலான இலக்கியங்கள்.) | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 5.2 புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவர். | - பாடுபொருள், புலவர்கள் /படைப்பாளிகள் கையாண்ட அணிகள், ஓசை அவர்களின் மொழியாட்சி, வடிவம், கற்பனைத் திறன், உலகப் பார்வை.<br>(சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலான புலவர்களும் இலக்கியப் படைப்பாளிகளும்.) | 20 |
| 6.0 ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். | 6.1 காலப் பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன் வைப்பார். | - காலவரையறை<br>- அரசியல், சமூக, சமய, கலாசார, பொருளாதார நிலைமை.<br>- ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் முதல் தற்காலம் வரையிலான இலக்கியங்கள். | 25 |
| | 6.2 புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார். | - பாடுபொருள், புலவர்கள் /படைப்பாளிகள் கையாண்ட அணிகள், ஓசை அவர்களின் மொழியாட்சி, வடிவம், கற்பனைத் திறன், உலகப் பார்வை.<br>(ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் முதல் தற்காலம் வரையிலான புலவர்களும் இலக்கியப் படைப்பாளிகளும்.) | 25 |
| 7.0 மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மை யாகக் கையாள்வார். | 7.1 மொழியின் இன்றியமையாமை, வளர்ச்சி, செயற்பாடு, அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்து கூறுவார். | - மொழியின் வளர்ச்சி<br>- சமூக வாழ்வில் மொழி<br>- பிறமொழித் தொடர்பு<br>- அறிவியல் வளர்ச்சிக்கு மொழி<br>- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு. | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 7.2 எழுத்துக்களின் வகைகளையும் தொகைகளையும் அறிந்து பயன்படுத்துவார். | • **எழுத்தியல்**<br>- எழுத்துக்களின் வகை<br>- மாத்திரை<br>- எழுத்துக்களின் பரம்பல்<br>- எழுத்துக்களின் ஒலிப்பு முறை<br>- மாற்றொலி | 20 |
| | 7.3 சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். | • **பதவியல்**<br>- பகுபதம், பகாப்பதம்<br>- பகுபத உறுப்புகள்<br>• **புணரியல்**<br>- அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி<br>- வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சி<br>- இயல்பு, விகாரம் | 20 |
| | 7.4 சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து, மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார். | • **சொல் லியல்**<br>- சொற்பாகுபாடு<br>- மூவகை மொழி<br>- இயல்பு, தகுதி வழக்குகள்<br>- இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்.<br><br>♦ **பெயர்ச்சொல்**<br>- அறுவகைப்பெயர், மூவிடப்பெயர், ஆக்கப்பெயர், மாற்றுப்பெயர், தனிப்பெயர், கூட்டுப்பெயர், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்.<br>- வேற்றுமை - மரபும் தற்காலம். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட |
|---|---|---|---|
| | | ♦ **வினைச்சொல்**<br>- முற்றுவினை, எச்சவினை<br>- தெரிநிலை வினை, குறிப்பு வினை<br>- உடன்பாட்டு வினை,<br>- எதிர்மறை வினை<br>- செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றாவினை<br>- தன்வினை, பிறவினை<br>- செய்வினை, செயப்பாட்டு வினை<br>- ஏவல் வினை, வியங்கோள் வினை<br>- தனிவினை, கூட்டுவினை (துணைவினைகள்)<br>- வினைச்சொற்கள் காலங்காட்டுதல்<br><br>♦ **இடைச்சொல்**<br>- தத்தம் பொருள் உணர்த்துவன (ஏ, ஓ, உம், மன், அம்ம, கொல், தான்)<br>- இடைச்சொல்லின் பயன்<br><br>♦ **உரிச்சொல்**<br>- பெயரடை<br>- வினையடை<br>- உரிச்சொல்லின் பயன் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 7.5 வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பார். | • **தொடரியல்.**<br>♦ தொடர்<br>- தொகைநிலை, தொகாநிலை<br><br>♦ **வாக்கியம்.**<br>- தனிவாக்கியம்<br>- கூட்டுவாக்கியம்<br>- கலப்பு வாக்கியம்<br>- வாக்கிய இணைப்பிடைச் சொற்கள்.<br>- வழுநிலை, வழாநிலை, வழுவமைதி (சொல், வாக்கியம்)<br>- நிறுத்தக் குறியீடுகள்<br><br>• **யாப்பியல்**<br>- செய்யுளின் பொது இலக்கணம்<br>- நால்வகைப் பா<br>- யாப்பு உறுப்புக்கள் - (எழுத்து, அசை, சீர்)<br>- எதுகை, மோனை<br><br>• **அணியியல்**<br>- தன்மை<br>- உவமை - இல்பொருள் உவமை, ஐயவுவமை.<br>- உருவகம்<br>- தற்குறிப்பேற்றம்<br>- உயர்வு நவிற்சி,<br>- சிலேடை | 40 |

## விதிக்கப்பட்ட பாடநூல்கள்
## தரம் 12

♦ **குறுந்தொகை** - அ. "கருங்கால் வேம்பின்..." - 24
(பரணர் )
ஆ. "நல்லுரை யிகந்து......... 29
(ஔவையார்)
- இ. "புனவன் றுடவை............. 105
(நக்கீரர்)
- ஈ. "நினையாய் வாழி....... 343
(ஈழத்துப் பூதந்தேவன்)

♦ **புறநானூறு** - அ. "பாணன் சூடிய.."- 141
(பரணர்)
ஆ. "அளிதோ தானே..." 109
(கபிலர்)
இ. "யாதும் ஊரே யாவரும் கேளிர். . .192
(கணியன் பூங்குன்றன்)

♦ **திருக்குறள்** - அங்க இயல் (6 அதிகாரங்கள்)
அமைச்சு , சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, தூது.

♦ **சிலப்பதிகாரம்** - மதுரைக்காண்டம் (துன்பமாலை)

♦ **சுந்தரர் தேவாரம்** - சீபர்ப்பதம்

♦ **பெரியாழ்வார் திருமொழி** - (நீராட்டம்) "வெண்ணெயளைந்த...... கார்மதி மேனி நிறத்துக்......"
பத்துப் பாடல்கள் (152-161 பாடல்கள்)

- **கம்பராமாயணம்** - கைகேயி சூழ்வினைப்படலம் (1 - 66 பாடல்கள்)
- **தேம்பாவணி** - பைதிரம் நீங்கு படலம் (1-39 பாடல்கள்)
- **பாரதியார் கவிதைகள்** - "பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி"
  "பெண்கள் விடுதலைக் கும்மி"
  " ஞாயிறு 1, 2"
- **உமர்கய்யாம் பாடல்கள் (மொழிபெயர்ப்பு)**

  **சு.து. சுப்பிரமணிய யோகியார்** - சுற்றி நடம்..........
  பொன்னை விளைத்து.........
  காணும் கன............

  **அப்துல்காதர்லெப்பை** - பாராய் அந்த...........
  நெடிதே எண்ணி.......
  மழைபோல் வாரி.....

  **தேசிகவிநாயகம்பிள்ளை** - சிரித்த ரோஜா..........
  நினைப்பு நீண்டு.......
  வாரிவாரிக்................

- **கம்பதாசன் கவிதை** - "தொழில் "
- **ந. பிச்சமூர்த்தி கவிதை** - "பூக்காரி"
- **மஹாகவி கவிதை** - "மீண்டும் தொடங்கும் மிடுக்கு"
- **நீலாவணன் கவிதை** - "இன்று உனக்கும் சம்பளமா?"
- **புரட்சிக்கமால் கவிதை** - "என் இறைவன்"

- **கட்டுரைகள்**
  - **பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை** - "விஞ்ஞானமும் அகராதியும்"
  - **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** - "நகைப்பூங்கொத்து"
  - **ஏ. ஜே. கனகரட்னா** - "விண் மீன்களுக்கு திரும்ப ஏகுதல்"

- **சிறுகதைகள்**
  - **புதுமைப்பித்தன்** - சாபவிமோசனம்
  - **செ. கதிர்காமநாதன்** - வெறும்சோற்றுக்கே வந்தது

- **நாவல்**

  **செ. கணேசலிங்கம்** - நீண்ட பயணம்

- **இலக்கிய வரலாறு**

  சங்ககாலம் - நாயக்கர் காலம்

  ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் - ஒல்லாந்தர் காலம்.

- **இலக்கணம்**
  - எழுத்தியல்
  - பதவியல்
  - சொல்லியல் I
    - சொற்பாகுபாடு
    - பெயர்ச்சொல்
    - வினைச்சொல்

## விதிக்கப்பட்ட பாடநூல்கள்
## தரம் 13

| | | |
|---|---|---|
| ♦ **நற்றிணை** | - | "பொங்குதிரை....." - 35<br>(அம்மூவனார்) |
| ♦ **திருக்குறள்** | - | அங்க இயல் (4 அதிகாரங்கள்)<br>மன்னரைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பு அறிதல், அவை அறிதல், அவை அஞ்சாமை |
| ♦ **மணிமேகலை** | - | "பழுதில் காட்சி தன்பிறப் புணர்த்த" (16 அடிகள்) |
| ♦ **கம்பராமாயணம்** | - | கைகேயி சூழ்வினைப்படலம் (67-115 பாடல்கள்) |
| ♦ **சீறாப்புராணம்** | - | மழையழைப்பித்த படலம் (1-21 பாடல்கள்) |
| ♦ **தனிப்பாடல் திரட்டு** | - | (5 பாடல்கள்)<br>''மன்னவனும் நீயோ..."<br>''ஓடும் இருக்கும்..."<br>''கத்துகடல்..."<br>''அப்பிலே தோய்த்திட்டு..."<br>''மட்டாருந் தென்கறந்தைப்..." |
| ♦ **பாரதிதாசன் கவிதைகள்** | - | 'பத்திரிகை'<br>'பாரதி உள்ளம்' |
| ♦ **கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை** | - | 'சூரிய காந்தி' |

- **முருகையன் கவிதை** - 'மாடு மாடு என்று பல '
- **சுபத்திரன் கவிதை** - 'ஆண்டவன் நீதான்'
- **குறிஞ்சித்தென்னவன் கவிதை** - 'சம்பள நாள்'
- **கட்டுரைகள்**
  - **தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்** - 'தமிழ்ச் செல்வாக்கு'
  - **சுவாமி விபுலாநந்தர்** - 'பாரதியார்'
  - **டாக்டர் மு. வரதராசன்** - 'மனவலிமை வேண்டும்'
- **சிறுகதைகள்**
  - **ஜெயகாந்தன்** - யுகசந்தி
  - **வ.அ. இராசரத்தினம்** - தாய்
  - **என்.எஸ்.எம். ராமையா** - ஒரு கூடைக் கொழுந்து
  - **மருதூர்க்கொத்தன்** - ஒளி
- **இலக்கிய வரலாறு**

  ஐரோப்பியர் காலம் - தற்காலம்

  ஐரோப்பியர் காலம் - தற்காலம் (ஈழம்)
- **இலக்கணம்**
  - புணரியல்
  - சொல்லியல் II
    - இடைச்சொல்
    - உரிச்சொல்
  - தொடரியல்
    - தொடர்
    - வாக்கியம்
  - யாப்பியல்
  - அணியியல்

## 4.0. கற்றல் - கற்பித்தல் முறைகள்

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர்கள் தனியாகவும் சோடியாகவும் குழுவாகவும் ஈடுபடும் வகையில், பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் கையாள வேண்டும்.
மொழிப்பாடத்திற்கு வகுப்பறையில் நடைமுறைப்படுத்தக்கூடிய பல்வேறு கற்றல் - கற்பித்தல் முறைகள் கீழே தரப்படுகின்றன.

- கலந்துரையாடல்
- வகிபங்கு
- போலச்செய்தல்
- சிந்தனைத் தூண்டல்
- நூலுசாவிக் கற்றல்
- நாடகம்
- விதிவருவித்தல்
- விதிவிளக்கல்
- ஒப்படை
- நுண்ணலகுக் கற்பித்தல்
- செயற்றிட்டம்

## 5.0 பாடசாலைக்கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்

தமிழ்மொழிக் கற்றலானது பாடத்திட்டத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றன்று. பாடசாலை முகாமைக் குழுவினர் பாடத்திட்டத்தின் நோக்கங்கள் எய்தப்படவேண்டிய தேர்ச்சிகளை நன்கு விளங்கிக்கொள்வதுடன், அவற்றினடிப்படையில் பாடசாலைக் கொள்கையை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் முனைதல் வேண்டும்.

பாடசாலையில் பாடத்திட்டத்தை அமுலாக்கும் போது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை மனதிற் கொண்டு மாணவர்களின் தேவையை ஈடுசெய்யும் வகையில் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்க்கவும் பொருத்தமான முறையில் கொள்கை உருவாக்கமும் நிகழ்ச்சித்திட்டமும் அமைய வேண்டும்.

அவற்றிற்கான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

1. பாடசாலையிலுள்ள தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் மொழியாசிரியர் என்ற நோக்கில் செயற்பட வழி செய்தல்.

2. பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்தின் தமிழ்மொழிசார் வளங்களை மாணவர்களின் மொழிவிருத்திக்காக உச்ச அளவில் பயன்படுத்துதல்.

3. இலக்கிய மன்றங்கள் போன்ற மாணவர் மன்றங்களை வகுப்பு ரீதியாக அமைத்து மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்க உதவுதல்.

4. பாடசாலை மட்டத்தில் விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம், இலக்கியப் போட்டி, பொது அறிவுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

5. பெரியார்களை அழைத்து இலக்கியச் சொற்பொழிவுகளை நடாத்துதல்.

6. நூல் நிலையங்களில் மொழி இலக்கியம் சார்ந்த நூல்களைக் களஞ்சியப்படுத்தல். வாசித்த இலக்கிய நூல்களில் இருந்து பெற்ற விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல்.

7. ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலே சிறுகதை, நாடகம், கவிதை போன்ற வற்றை எழுதுவதற்கும் சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பன எழுதுவதற்குமான போட்டிகளை நடாத்துதல்.

8. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கூத்துகள், நாடகங்கள் போன்ற சிறப்பான கலையம்சங்களையறிந்து அவற்றைப் பாடசாலை மன்றங்களினூடாக மேடையேற்றுவதன் மூலம் பிரதேசக் கலைப்பாரம்பரியங்களை வளர்க்க வழிசெய்தல்.

9. கலைவிழாக்களை ஒழுங்குசெய்தல். பங்குபற்றுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

10. சஞ்சிகை வெளியிடல். ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல் என்பவற்றிற்கு ஊக்கமளித்தல்.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலைமட்டக் கணிப்பீட்டு, மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ், அந்தந்தத் தவணைக்குரிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் உள்ளடங்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் கணிப்பீட்டுக் கருவிகளை ஆக்கபூர்வமான வகையில் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

13 ஆந் தரத்தின் இறுதியில் இடம்பெறும், தேசிய மட்டத்திலான மதிப்பீடாகிய க.பொ.த. உயர்தர பரீட்சைக்காக இப்பாடத்திட்டம் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் தேசியமட்டத்தில் நடத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் இடம்பெறும்.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தேவையான விவரங்கள் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் வழங்கப்படும்.